# பணிப்பாளர் பதவி

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகம் (PIM) பணிப்பாளர் பதவிக்காக, தகுதியுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் நிறுவகமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையின் கீழ் 1986 இல் நிறுவப்பட்டது. மேலும் தற்போது 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க PIM கட்டளையினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்நிறுவகம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் துறைகளில் பட்டமேற்படிப்பு, தொழில் முறைப்பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை வழங்கும் ஒரு சுயநிதி ஈட்டும் உயர்கல்வி நிறுவனமாக இயங்குகிறது.

பணிப்பாளர் என்பவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான கல்வி அதிகாரி மற்றும் கணக்கீட்டு அதிகாரி ஆவார். அத்துடன், முகாமை சபையின் பதவி வழி உறுப்பினராகவும் தவிசாளராகவும், நிறுவகத்தின் கற்கை சபைகளின் பதவி வழி உறுப்பினராகவும் நிறுவகத்தின் கல்வி, தொழில் முறைமை மற்றும் நிர்வாகத் தலைமைத்துவத்தை வழங்குவதுடன் பட்டப்பின் முகாமைத்துவக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை வளர்ச்சியின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பதாரர் முகாமைத்துவம், நிர்வாகம் அல்லது தொடர்புடைய துறையில் சிறந்த கல்வி மற்றும் தொழில் முறைத் தகுதிகளுடன், சாதனை, தலைமைத்துவம், ஆராய்ச்சி, நிர்வாகம் மற்றும் தொழில்முறைப் பங்களிப்புகளில் பாராட்டத்தக்க பதிவைக் கொண்ட ஒரு சிறந்த நபராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாகவும், விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியில் 63 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நிறுவகத்தில் முழுநேர அடிப்படையில் பணியாற்றுதல் வேண்டும். மேலும் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை அல்லது அறுபத்தைந்து வயதை அடையும் வரை (எது முதலில் நிகழ்கிறதோ) பதவி வகிப்பார். பணிப்பாளர் சம்பளக் குறியீடு U-AC5 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம், அச்சம்பளக் குறியீட்டிற்குப் பொருந்தும் படிகள் மற்றும் பணிப்பாளர் பதவிக்குப் பொருந்தும் இதர சலுகைகளுக்கும் உரிமையுடையவராவார்.

**விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்**

1. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் (PIM வலைத்தளமான www.pim.sjp.ac.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்).
2. நிறுவகத்தின் வளர்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கை (Statement of Vision).
3. பணிப்பாளராக நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர் என்ன செய்ய உத்தேசித்துள்ளார் என்பது பற்றிய ஒரு சுருக்கமான விபரம். தற்போதைய பணிப்பாளர் விண்ணப்பதாரராக இருக்கும் பட்சத்தில் அல்லது விண்ணப்பதாரர் ஒருவர் இதற்கு முன்னர் இந்நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியை வகித்திருந்தால், முந்தைய பதவிக் காலத்தில் அடைந்த சாதனைகளைச் சுட்டிக்காட்டும் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி உட்பட முழுமையான சுயவிபரக் குறிப்பு (Curriculum Vitae). (பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் இணைக்கப்பட வேண்டும்).
5. கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதிகளின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் மற்றும் தலைமைத்துவம், ஆராய்ச்சி வெளியீடுகள், தொழில்முறை சாதனைகள், பாராட்டுகள் மற்றும் நிர்வாக அனுபவம் தொடர்பான ஆவணச்சான்றுகள் (பொருந்தும் இடங்களில்).
6. அரசசேவை, கூட்டுத்தாபனங்கள், சட்டப்பூர்வ நிறுவகங்கள் அல்லது உயர் கல்வி நிறுவகங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், நியமிக்கப்பட்டால் பதவியை பொறுப்பேற்பதற்கு விண்ணப்பதாரரை விடுவிக்க முடியும் என்ற உறுதிப்படுத்தலுடன், சம்மந்தப்பட்ட நிறுவகத்தின் தலைவர் மூலமாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

தெரிவு செயல்முறையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கு அமைவாக நடத்தப்படும். சுற்றறிக்கை மற்றும் PIM கட்டளையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகம் (PIM), 28, லெஸ்லி ரணகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு முகவரியிடப்பட்டு, 2026 ஒக்டோபர் 30 ஆம் திகதி 3.00 மணி அல்லது அதற்கு முன்னதாக அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் கடித உறையின் மேல் இடது மூலையில் "Application for the Post of Director" எனத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள், குறித்த முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்குப் பின்பு பெறப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே உள்ள தேவைகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மென்பிரதி (Soft copy) ஏனைய அனைத்து ஆவணங்களுடன் ஒரே PDF கோப்பாகத் தொகுக்கப்பட்டு, 2026 ஒக்டோபர் 30 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி அல்லது அதற்கு முன்னதாக sar@pim.sjp.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்**
**மற்றும் முகாமைச் சபையின் செயலாளர்**

**பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**

**ஒக்டோபர் 09, 2026**

PIM Postgraduate Institute of Management
*University of Sri Jayewardenepura*

28, லெஸ்லி ரணகல மாவத்தை, கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : +94 11 2 689 639
தொலைநகல்: +94 11 2 689 643
இணையதளம்: www.pim.sjp.ac.lk
மின்னஞ்சல்: sar@pim.sjp.ac.lk